Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C.** 153/2022 |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW**8 |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | இளங்கோ |
| Father/Husband Name | : | பால்பாண்டி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.12.2022.

முதல் விசாரணை–

நான் இராமநாதபுரம் நேருநகரில் வசித்து வருகிறேன். நான் டெய்லர் வேலை பார்க்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன பனையடியான் எனது மைத்துனன் ஆவார். அவர் இறப்பதற்கு முன்பு ஆட்டோ ஓட்டி தொழில் செய்து வந்தார். ஆஜர் எதிரிகளை தெரியாது. இவ்வழக்கில் இறந்துபோன பனையடியான் எப்படி, யாரால் தாக்கி கொலை செய்யப்பட்டார் என்ற விவரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டது)

<u>**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**</u> –

போலிஸ் விசாரணையில் கடந்த 05.03.2021ம் தேதி மாலை 05.00 மணியளவில்

நானும், செல்லையா மகன் பாண்டி என்பவரும் இராமநாதபுரம் ரோட்டிற்கு அருகில் உள்ள அண்ணாசிலை அருகில் பேசிக்கொண்டிருந்தோம் என்றும் அப்போது கீழேகிடந்த ஒரு நபரை ஆஜர் எதிரிகள் 3 பேரும் கையாலும், அருவாளாலும், கட்டையாலும் தாக்கினார்கள் என்றும் பின்னர் எதிரிகள் 3 பேரும் ஒரு ஆட்டோவில் வண்டிக்கார தெரு வழியாக சென்றுவிட்டார்கள் என்றும் இரத்தவெள்ளத்தில் கிடந்த பனையடியானை அருகில் இருந்தவர்கள் ஒரு ஆட்டோவில் ஏற்றி இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள் என்றும் பின்னர் பனையடியான் மருத்துவமனையில் இறந்துவிட்டார் என்றும் இவ்வழக்கின் 1ம் எதிரி அண்ணாமலை என்பவருக்கும் வழக்கில் இறந்துபோன பனையடியானுக்கும் முன்விரோதம் ஏற்பட்டு 1ம் எதிரியின் தூண்டுதலின் பேரில் மற்ற எதிரிகள் சேர்ந்து பனையடியானை தாக்கி கொலை செய்துவிட்டதாக தெரிந்து கொண்டு போலிசா விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.